सत्यमेव जयते

# இந்தியத்துணைத்தூதரகம்
# யாழ்ப்பாணம்

## <u>ஊடக அறிக்கை</u>

## இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கும் வழிகாட்டலும்

இளமாணி முதுமாணி, கலாநிதிப் பட்டம் ஆகிய உயர்கல்வியை இந்திய பல்கலைக்கழகங்களில் தொடர விரும்பும் மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்துடன்(EdCIL) இணைந்து ஏற்பாடு செய்த வழிகாட்டல் கருத்தரங்கானது 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

கருத்தரங்கில் இந்திய கல்வி ஆலோசனை நிறுவனத்தின் அதிகாரிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தமக்கூடாக பெறக்கூடிய அவற்றுக்கான அனுமதி நடைமுறைகள் பற்றிய விபரங்களை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் சுருக்கமாக வழங்கினர். இச்செயலமர்வு மற்றும் வழிகாட்டல் அமர்வானது பெருமளவு எண்ணிக்கையான வடமாகாணத்தின் உயர்தர மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்குபற்றலுடன் வெற்றிகரமான நிகழ்வாக அமைந்தது.

பிரதித்துணைத்தூதர் திரு.எஸ்.தட்சணாமூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள், வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ கஜதீபன் அவர்கள், கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஞானசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் திரு. எழில்வேந்தன் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

யாழ். இந்திய பிரதித் துணைத்தூதுவர் தனது உரையில் இந்தியாவில் வழங்கப்படும் கல்வியின் உயர்தரம் காரணமாக அங்கு பயில்வதன் முக்கியத்துவத்தை உணர்த்தியதோடு வட மாகாண மாணவர்கள் இத்தகு சிறப்பான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துமாறு ஊக்குவித்தார். பொதுவாக மனித வள முகாமைத்துவத்தை விருத்தி செய்தல் மற்றும் தனிநபர்களின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தின் முயற்சியானது இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் ஆதரவுடன் நடைபெறும்

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதும் இந்தியாவில் கல்விபயில விரும்பும் மாணவர்களின் தேவையாகவும் அமைந்தது. பதில் துணைத்தூதுவர் இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தினருக்கு வடமாகாண மாணவர்களின் நன்மை கருதி நிகழ்வை ஒழுங்கு செய்தமைக்காக நன்றி தெரிவித்தார்.

இந்திய கல்வி முறைமையானது மிகச்சிறந்த பல தனித்தன்மைகளைக் கொண்ட பல நிறுவனங்களின் வலையமைப்பாகும். இந்தியாவானது ஆங்கிலம் பேசுவோரை அதிகம் கொண்ட நாடுகளில் ஒன்றாகும். இங்கு உயர்கல்விப் போதனை மொழி ஆங்கிலமாகும். இங்கு பரந்துபட்ட துறைகளில் கற்கைநெறிகள் நியாயமான கட்டணத்தில் உள்ளன. 200 கம்பனிகள் தமது தொழிலாளர்களை வளாகங்களில் நேர்முகத்தேர்வை நடத்தி தெரிவுசெய்வதுடன் அவர்களுக்கான தொழில்வாய்ப்பை உலகம்பூராகவும் வழங்குகின்றன.

இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தின் பணிகள் பலவற்றில் கல்வியை வெளிநாடுகளில் ஊக்குவிப்பதும் ஒன்றாகும். இந்நிறுவனம் கடந்த 33 ஆண்டுகளாக 50 இற்கு மேற்பட்ட நாடுகளில் இப்பணியை ஆற்றி வருகிறது. அண்மைக் காலங்களில் பல இலங்கை மாணவர்கள் இந்திய பல்கலைக் கழகங்களில் அனுமதியைப் பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் சேவைகள் கல்வி மற்றும் மனிதவள மேம்பாட்டு வழிகாட்டல் ஆகிய துறைகளில் அமைவதோடு கல்வி நிறுவனங்கள் பற்றிய கொள்கை உருவாக்கம் மற்றும் அவற்றை எல்லா வகையிலும் (மென்பொருள் மற்றும் உட்கட்டுமானம் உள்ளடங்கலாக) அந்தந்த நிறுவனங்களின் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப நடைமுறைப்படுத்துகிறது.

இந்நிகழ்வில் 300 இற்கும் அதிகமான மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் பங்குபற்றி பயனடைந்தனர். எதிர்வரும் வருடங்களிலும் இதுபோன்ற வழிகாட்டல் நிகழ்வுகளை நடாத்துமாறு கல்வியியலாளர்கள் இந்தியத் துணைத்தூதரகத்தைக் கேட்டுக்கொண்டனர்.